பஞ்சாப் முதல்வர் பகவந்த்மான் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்கிறார்! தொடக்கப் பள்ளிகளில் 3 லட்சத்து 5 ஆயிரம் மாணவ – மாணவியர் பயன்பெறும்

# ‘முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்’ விரிவாக்கம்!

## வருகிற 26ஆம் தேதி சென்னையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைக்கிறார்!



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் 15.9.2022 அன்று மதுரை, ஆதிமூலம் மாநகராட்சி தொடக்கப் பள்ளியில், 1 முதல் 5ஆம் வகுப்பு வரை பயிலும் அரசுப் பள்ளி மாணவர்களுக்கு காலை உணவு வழங்கும் திட்டமான முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தைத் தொடங்கி வைத்து குழந்தைகளுக்கு உணவினை ஊட்டி மகிழ்ந்தார்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் 15.7.2024 அன்று திருவள்ளூர் மாவட்டம், கீழச்சேரி, புனித அன்னாள் தொடக்கப் பள்ளியில் நடைபெற்ற விழாவில், முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தை ஊரகப் பகுதிகளில் உள்ள அனைத்து அரசு உதவி பெறும் பள்ளிகளிலும் 1 முதல் 5ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு விரிவுபடுத்தி தொடங்கி வைத்து, மாணவ, மாணவியர்களுடன் உரையாடினார்.

**சென்னை, ஆக. 22 -**

**தமிழ்நாடு முழுவதும் நகர்புறப் பகுதிகளில் உள்ள அரசு உதவி பெறும் தொடக்கப் பள்ளிகளில் பயிலும் 3 இலட்சத்து 5 ஆயிரம் மாணவ, மாணவியர்கள் பயன் பெறும் வகையில் முதலமைச்சரின் காலை உணவுத் திட்ட விரிவாக்கத்தை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 26.8.2025 அன்று சென்னையில் தொடங்கி வைக்கிறார்கள். இந்நிகழ்ச்சியில் பஞ்சாப் முதலமைச்சர் பகவந்த் மான் அவர்கள் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்கிறார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், 15.9.2022 அன்று அரசுப் பள்ளி மாணவர்களுக்கு காலை உணவு வழங்கும் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தை இந்தியாவிலேயே முதன் முறையாக மதுரை, ஆதிமூலம் மாநகராட்சி தொடக்கப் பள்ளியில் மாணவச் செல்வங்களுக்கு காலை உணவினை பரிமாறி திட்டத்தினைத் தொடங்கிவைத்தார்கள். இத்திட்டம் பெற்றோர்கள் மற்றும் மாணவர்களிடையே பெருத்த வரவேற்றைப் பெற்றது.

**கலைஞர் பிறந்த நாளில் திருக்குவளையில் தொடங்கிய முதல்வர்!**

இதனால், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 25.8.2023 அன்று முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் பிறந்த ஊராகிய திருக்குவளையில் உள்ள அரசுத் தொடக்கப் பள்ளியில் முதலமைச்சரின் காலை உணவுத் திட்ட விரிவாக்கத்தை தொடங்கி வைத்தார்கள். இதன் மூலம் 30 ஆயிரத்து 992 பள்ளிகளில் பயிலும் 18 இலட்சத்து 50 ஆயிரம் மாணவ, மாணவியர்கள் காலை உணவை சூடாகவும் சுவையாகவும் உண்டு மகிழ்ச்சியோடு பள்ளிப் பாடங்களில் கவனம் செலுத்திப் படித்து வருகிறார்கள்.

அதன் தொடர்ச்சியாக 15.7.2024 அன்று பெருந்தலைவர் காமராசர் அவர்களின் பிறந்த நாளில், திருவள்ளூர் மாவட்டம் கடம்பத்தூர் ஒன்றியம், கீழச்சேரி கிராமத்தில் உள்ள புனித அன்னாள் அரசு உதவி பெறும் தொடக்கப் பள்ளியில் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் விரிவாக்கம் செய்யப்பட்டு 3,995 அரசு உதவி பெறும் தொடக்கப் பள்ளிகளில் பயிலும் 2 இலட்சத்து 23 ஆயிரத்து 536 மாணவ மாணவியர்கள் பயனடைந்து வருகிறார்கள்.

**பள்ளிக்கு வரும் மாணவர்கள் எண்ணிக்கை அதிகரிப்பு!**

இத்திட்டத்தினால் பள்ளிக்கு வருகை தரும் மாணவ, மாணவியர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதோடு, குழந்தைகளின் கற்றல் திறனும் மேம்படுத்தப்பட்டு 90%க்கும் அதிகமான குழந்தைகளின் முந்தைய பாடங்களை நினைவு கூர்வது அதிகரிப்பதாக ஆய்வறிக்கையில் காணப்பட்டுள்ளது. மேலும் மாணவ மாணவியர்கள் பசியின்றி பள்ளிக்கு வருவதால் ஊட்டச்சத்து குறைபாடினால் பாதிக்கப்படுவதும் களையப்பட்டதுடன் குழந்தைகளின் ஆரோக்யமும் மேம்படுத்தப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டைப் பின்பற்றி தெலங்கானா உள்ளிட்ட பல்வேறு மாநிலங்கள் தங்களது பள்ளிகளில் காலை சிற்றுண்டி திட்டத்தைத் தொடங்கியுள்ளனர். தமிழ்நாட்டின் காலை உணவுத் திட்டத்தை கனடா அரசும், தங்களது நாட்டில் நடைமுறைப்படுத்தி உள்ளது குறிப்பிடத் தக்கதாகும்.

**காலை உணவுத் திட்டத்தால் பயனடையும் மாணவர்கள்!**

மேலும், முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் நகர்ப்புறப் பகுதிகளில் அமைந்துள்ள 2,430 அரசு உதவி பெறும் தொடக்கப் பள்ளிகளில் ஒன்றாம் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு வரை பயிலும் 3 இலட்சத்திற்கும் மேற்பட்ட மாணவ, மாணவியர்கள் இத்திட்டத்தின் கீழ் பயனடையும் வகையில் விரிவுபடுத்தப்படும் என்று 14.3.2025 அன்று அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

அதன்படி, தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நகரப் பகுதிகளில் உள்ள அனைத்து அரசு உதவி பெறும் தொடக்கப் பள்ளிகளில் 1 முதல் 5ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியருக்கு முதலமைச்சரின் காலை உணவுத் திட்ட விரிவாக்கத்தை சென்னை மயிலாப்பூரில் உள்ள புனித சூசையப்பர் தொடக்கப் பள்ளியில் 26.8.2025 அன்று தொடங்கிவைக்க உள்ளார்கள்.

இந்நிகழ்ச்சியில் பஞ்சாப் மாநில முதலமைச்சர் பகவந்த் மான் அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்து கொள்கிறார். இத்திட்டத்தின் வாயிலாக 3.05 இலட்சம் மாணவ-மாணவியர்கள் தினசரி பயன்பெற உள்ளார்கள்.

---

### வேலூர், இராணிப்பேட்டை, திருப்பத்தூர் மாவட்டங்களின்

## கிராமப்புற இளைஞர்களின் வேலைவாய்ப்புக்கான நடவடிக்கைகள் என்ன?

### மக்களவையில் — டி.எம்.கதிர் ஆனந்த் கேள்வி!

புதுடெல்லி, ஆக. 22 -

வேலூர் மக்களவைத் தொகுதியில் கிராமப்புற இளைஞர்களுக்கான திறன் மேம்பாடு மற்றும் வேலைவாய்ப்புகளை மேம்படுத்துவதில் தேசிய கிராமப்புற வாழ்வாதார இயக்கம் (NRLM) ஆற்றிய பணிகள் குறித்து மக்களவையில் வேலூர் தொகுதி உறுப்பினர் டி.எம்.கதிர் ஆனந்த் எம்.பி. கேள்வி எழுப்பினார்.



தமிழ்நாட்டில், குறிப்பாக வேலூர், ராணிப்பேட்டை மற்றும் திருப்பத்தூர் மாவட்டங்களில் கிராமப்புற இளைஞர்களுக்கான திறன் மேம்பாடு மற்றும் வேலைவாய்ப்பு களை மேம்படுத்துவதில் தேசிய கிராமப்புற வாழ்வாதார இயக்கம் (NRLM) ஆற்றிய பங்கின் விவரங்கள் தருக? மற்றும் வேலூர் மக்களவைத் தொகுதியில் NRLM இன் கீழ் இளைஞர்களின் வேலைவாய்ப்பு நிலை மற்றும் வேலூர் மக்களவைத் தொகுதியில் கிராமப்புற இளைஞர்களுக்கான வேலைவாய்ப்புகளை மேம்படுத்த எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவை? என்று அவர் கேட்டிருந்தார்.

அதற்கு ஒன்றிய அரசின் ஊரக மேம்பாட்டு அமைச்சகத்தின் அமைச்சர் கம்லேஷ் பாஸ்வான் எழுத்து பூர்வமாக அளித்த பதில் வருமாறு:

ஒன்றிய அரசு கொடை திட்டங்களில் தீனதயாள் அந்த்யோதயா யோஜனா தேசிய கிராமப்புற வாழ்வாதார மிஷன் (DAY-NRLM) திட்டத்தின் கீழ், கிராமப்புற மேம்பாட்டு அமைச்சகம் பின்வரும் இரண்டு மத்திய நிதியுதவி திட்டங்களை செயல்படுத்துகிறது, அதாவது தீனதயாள் உபாத்யாயா கிராமீன் கௌசல்யா யோஜனா (DDU-GKY) & கிராமப்புற சுய வேலை வாய்ப்பு பயிற்சி நிறுவனங்கள் (RSETI) ஆகியவை கிராமப்புற ஏழை இளைஞர்களின் திறன் மேம்பாட்டிற்காக, அவர்களின் லாபகரமான வேலைவாய்ப் புக்காக, தமிழ்நாடு உட்பட நாட்டில் வறுமையை ஒழிக்கும் நோக்கில் செயல்படுத்தப்படுகின்றன.

திட்டங்கள் பற்றிய சுருக்கம் பின்வருமாறு:

i. தீனதயாள் உபாத்யாயா கிராமீன் கௌசல்யா யோஜனா (DDU-GKY): DDU-GKY என்பது 15-35 வயதுக்குட்பட்ட கிராமப்புற ஏழை இளைஞர்களுக்கான வேலைவாய்ப்புடன் இணைக்கப்பட்ட திறன் மேம்பாட்டுத் திட்டமாகும். இது கிராமப்புற ஏழை இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புத் திறன்களை வழங்கி, வழக்கமான தொழிலாளர் வேலை வாய்ப்பு சந்தைகளில் அவர்கள் பங்கேற்பதை எளிதாக்குகிறது, இதனால் அவர்களுக்கு குறைந்த பட்ச ஊதியத்தில் அல்லது அதற்கு மேல் வழக்கமான மாத ஊதியம் கொண்ட வேலைகளை வழங்குகிறது. DDU-GKY வழிகாட்டுதலின் படி

SC/ST (50%), பெண்கள் (33%) மற்றும் PwDs (5%) ஆகியோரை சமூக ரீதியாக உள்ளடக்குகிறது.

ii. கிராமப்புற சுய வேலை வாய்ப்பு பயிற்சி நிறுவனங்கள் (RSETIs): RSETI என்பது வங்கி தலைமையிலான கிராமப்புற மேம்பாட்டு அமைச்சகத்தின் (MoRD) நிதியுதவியுடன் கூடிய பயிற்சி நிறுவனமாகும், இது அவர்களின் மாவட்டங்களில் ஸ்பான்சரிங் வங்கிகளால் நிறுவப் பட்டது, இது திறன் மற்றும் தொழில் முனைவோர் மேம்பாட்டிற்கான பயிற்சியை வழங்குகிறது.

RSETI கட்டிடத்தை நிர்மாணிப்பதற்கு MoRD நிதி உதவி வழங்குகிறது மற்றும் ‘கிராமப்புற ஏழை’ பயனாளர் பயிற்சி அளிப்பதற்கான செலவையும் ஏற்கிறது.

சுயதொழில் அல்லது தினக் கூலி வேலைவாய்ப்பை மேற்கொள்ளும் திறன் கொண்ட 18-50 வயதுடைய எந்தவொரு வேலையற்ற இளைஞரும் RSETI இல் பயிற்சி பெறலாம். பயிற்சி பெற்ற சில பயனர்கள் வழக்கமான சம்பள வேலைகள் / கூலி வேலைவாய்ப்பையும் நாடலாம்.

தமிழ்நாட்டின் வேலூர், ராணிப்பேட்டை மற்றும் திருப்பத்தூர் மாவட்டங்களில் 2014-15 நிதியாண்டு முதல் 2025-26 வரை ஜுன் 2025 வரை NRLM இன் கீழ் DDU-GKY & RSETI திட்டங்களின் கீழ் பயிற்சி பெற்ற/இடமளிக்கப்பட்ட/குடியே ற்றப்பட்ட இளைஞர்களின் விவரங்கள் பின்வருமாறு: -

வேலூர் மாவட்டத்தில் DDU-GKY திட்டத்தின் கீழ் 1446 பேர் சேர்க்கப்பட்டு 814 பேருக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. RSETI கீழ் 9998 பேர் சேர்க்கப்பட்டு 6772 பேருக்கு பயிற்சி அளிக்கப் பட்டது. திருப்பத்தூர் மாவட்டத்தில் DDU-GKY திட்டத்தின் கீழ் 1387 பேர் சேர்க்கப்பட்டு 908 பேருக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. RSETI கீழ் 2943 பேர் சேர்க்கப்பட்டு 2193 பேருக்கு பயிற்சி அளிக்கப்பட்டது.

ராணிப்பேட்டை மாவட்டத்தில் DDU-GKY திட்டத்தின் கீழ் 1283 பேர் சேர்க்கப்பட்டு 755 பேருக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. RSETI கீழ் 2891 பேர் சேர்க்கப்பட்டு 2054 பேருக்கு பயிற்சி அளிக்கப்பட்டது.

இவ்வாறு அமைச்சர் தனது பதிலில் கூறியுள்ளார்.



சேலம் சிறையில் 1950 ஆம் ஆண்டு நடைபெற்ற நிகழ்வில் சுட்டுக் கொல்லப்பட்ட 22 பேரின் நினைவாக நினைவு மணிமண்டபம் அமைக்கப்படும் என தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சேலத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் அறிவித்ததை தொடர்ந்து, சேலம். அஸ்தம்பட்டி புதிய நீதிமன்ற வளாகத்திற்கு எதிரே மணிமண்டபம் அமைப்பதற்கான இடம் தேர்வு குறித்து சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் , மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா.பிருந்தாதேவி, முன்னிலையில் நேற்று (21.08.2025) ஆய்வு மேற்கொண்டார்கள். உடன், மாவட்ட வருவாய் அலுவலர் .இரா.ரவிக்குமார், சேலம் வருவாய் கோட்டாட்சியர் திருமதி அபிநயா, சேலம் வட்டாட்சியர் பார்த்த சாரதி உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் உள்ளனர்.

---

## சென்னை தென்மேற்கு மாவட்ட கழக ஆலோசனைக் கூட்டம்!

### மாவட்டச் செயலாளர் மயிலை த. வேலு எம்.எல்.ஏ அறிவிப்பு !

*சென்னை, ஆக. 22 -*

*சென்னை தென்மேற்கு மாவட்டச் செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ. விடுதுள்ள அறிக்கை வருமாறு:*



*சென்னை தென்மேற்கு மாவட்ட கழக பகுதி செயலாளர்கள் ஆலோசனை கூட்டம் இன்று 22.8.2025 மாலை 6:00 மணியளவில் மாவட்ட அவைத்தலைவர் அ. சந்திரசேகர் தலைமையில் சி.பி.ராமசாமி சாலையில் உள்ள அலுவலகத்தில் நடைபெறுகிறது.*

*எனவே இக்கூட்டத்தில் , மாவட்ட நிர்வாகிகள், பகுதி செயலாளர்கள் , வட்ட செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள் ஆகியோர் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.*

*பொருள் : மயிலை பகுதிக்கு கழக தலைவர் வருகையையொட்டி மற்றும் கழக அக்க பணிகள்..*

*இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.*



பல்லாவரம் சட்டமன்றத் தொகுதி தாம்பரம் மாநகராட்சி மண்டலம்3 35 வது மற்றும் 36வது வார்டுகளில் நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் சிறப்பு முகாமை மாவட்டக் கழக துணை செயலாளர் இ. கருணாநிதி எம்.எல்.ஏ துவக்கி வைத்து பொதுமக்களிடம் கோரிக்கை மனுக்களை பெற்று அந்தந்த துறைகளிடம் வழங்கி தீர்வு கண்டு நல திட்ட உதவிகளை வழங்கினார். மேயர் க. வசந்தகுமாரி, துணை மேயர் கோ. காமராஜ், மாமன்ற உறுப்பினர்கள் சங்கீதா விஜய், சரஸ்வதி சந்திரசேகர் , மாநகராட்சி துணை ஆணையர் மாநகராட்சி அதிகாரிகள் கழக நிர்வாகிகள் ஆகியோர் உடன் இருந்தனர்.